**STARTING TIME 11.40 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 125/2026**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 27.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : கிருபாநந்தன் Father's Name : காசிநாதன்

Address : எண்.5, செந்தில் நகர், மங்மம்மாபேட்டை கிராமம், அரக்கோணம் வட்டம்.

Age : 66

**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் வாதி எனக்கு என்ன உறவு என்றால், உறவினர் ஆவார். கண்ணன் என்பவரும் எனக்கு உறவினரா என்றால், ஆமாம். வாதி தாவா சொத்தை கிரையம் பெற்றது சம்மந்தமாக நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால், ஆமாம். கண்ணன் என்பவர் சென்னையில் தான் உள்ளார் என்றால், சரிதான். தாவா சொத்தில் கண்ணன் என்பவர் வீடு எதுவும் கட்டி அனுபவித்து வந்தாரா என்றால், இல்லை.

2. கிரையத்திற்கு பின்னிட்டு வாதி தேவராஜ் தாவா சொத்தில் வீடு எதுவும் கட்டி அனுபவித்து வந்தாரா என்றால், இல்லை, ஆனால் அந்த இடத்தில் போய் வருவார். தாவா சொத்து என நான் சொல்லும் இடம் கிராம நத்தம் என்றால், சரிதான்.

3. தாவா சொத்து சம்மந்தமாக கண்ணன் பெயரில் ஆவணம் எதுவும் இருந்ததா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. மோகன்வேலு என்னும் பழநி தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால், இல்லை, காலமாகிவிட்டார். மேற்படி மோகன்வேலு என்னும் பழநி என்பவர் அவரது தகப்பனார் காலத்தில் இருந்து தாவா சொத்தின் ஒரு பகுதியை அனுபவித்து வந்தார் என்றால், சரியல்ல.

4. 2018–ஆண்டு மேற்படி மோகன்வேலு என்னும் பழநி மற்றும் 1–ம் பிரதிவாதி மணிகண்டன் ஆகியோர் தாவா சொத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக சொல்லவது தவறும் என்றும், அவர்களது தகப்பனார் காலத்தில் இருந்தே அந்த சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல.

5. வாதியின் கிரையதாரான கண்ணன் என்பவர் 1–ம் பிரதிவாதி மற்றும் மோகன்வேலு என்னும் பழநி என்பவர்கள் மீது காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்திருந்தாரா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. கண்ணன் என்பவரிடமிருந்து வாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற போது அந்த இடத்தை வாதி அளந்து பார்த்து வாங்கியதை நான் பார்த்தேனா என்றால், நான் பார்க்கவில்லை, ஆனால் வாதி அளந்து பார்த்திருப்பார், அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கு தாவா சொத்துக்கள் சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME: 11.51. A.M.**

Special Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.03.27 13:02:08 +0530